Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 20 ( 02 - 05 - 1992 ) சனிக்கிழமை ஓசை: 74

## தமிழிசை விழா இன்று நல்லூரில் ஆரம்பம்

நல்லூரில் இன்று விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும்' தமிழிசை விழா' ஆரம்பமாகவுள்ளது. இவ்விழா இன்றுமாலை 5.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியில் அமைக்கப்பட்டுள்ள கலை அரங்கத்தில் மங்கள இசையுடனும் தமிழ் வாழ்த்துப் பாடலுடனும் ஆரம்பமாகும். தொடராகஐந்து நாட்கள் இடம்பெறவுள்ள தமிழிசை விழாவில் தமிழீழத்தின் நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். (6ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய மேதின பேரணியில் தமிழீழ காவல் துறையினர் அணிவகுத்துச் செல்வதையும், மே தின எழுச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்ட இலட்சக் கணக்கான மக்களின் ஒரு பகுதியினரையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

# புலிகளின் மே தின விழாவில் அணி திரண்ட சன சமுத்திரம்

## எழுச்சிமிகு மக்கள் பேரணிகள் நூற்றுக்கணக்கில் ஊர்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று விடுதலைப்புலிகள் ஏற்பாடுசெய்த மேதின விழாவில் லட்சக் கணக்கான மக்கள் அணிதிரண்டனர். விடுதலைப் புலிகளின் அணிவகுப்புடனும், பான்ட் வாத்திய இசையுடனும் மாபெரும் பேரணி இடம்பெற்றது. இப்பேரணியில் இன்றைய பல்வேறு நிகழ்வுகளைச் சித்தரிக்கும் நூற்றுக்கணக்கான ஊர்திகளும் பங்கு கொண்டன. இதனைத் தொடர்ந்து பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது.

(யாழ்ப்பாணம்)

திட்டமிட்டவாறு மருதனார் மடம் சந்தியில் இருந்து 2-00 மணிக்கு பேரணி ஆரம்பமாகியது.

ஐந்து கிலோ மீற்றருக்கும் அதிகமான நீளம் கொண்ட எழுச்சிப்பேரணியில் இலட்சக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். நூற்றுக்கணக்கான ஊர்திகளையும், பதாகைகளையும் கொண்ட இப் பேரணி குறிப்பிட்ட ஒருபுள்ளியைக் கடந்து செல்வதற்குச் சுமார் நான்கு மணித்தியாலங்களுக்கு மேலான நேரத்தை எடுத்தது

வரலாற்றில் என்றுமில்லாதவாறு நேற்றைய மேதினஎழுச்சிப் பேரணியில் அனைத்துத் தொழிற் சங்கங்கள், பொது நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் போன்ற அனைத்து அமைப்புக்களது உறுப்பினர்களும், பொதுமக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## மே தின பாரம்பரியத்திற்கு தமிழீழத்தில் புத்துயிர்ப்பு

-- பாலகுமாரன்

(யாழ்ப்பாணம்)

'' ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் உரிமைகளை மீட்டெடுப்பதற்கான கோரிக்கைகளை முன் வைத்தே இன்று நாம் மே தினத்தை அனுஷ்டிக்கிறோம். உலகில் எங்குமில்லாதவாறு இன்று புதிய வீச்சுடனும், புதிய எழுச்சியுடனும் நாம் மே தினத்தை அனுஷ்டிக்கிறோம். இது இறந்து கொண்டிருக்கும் மே தின பாரம்பரியத்துக்கு புத்துயிர்ப்பூட்டுவதாக அமைகிறது''
(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒடுக்கப்பட்ட தமிழினம் கிளர்ந்தெழுந்து விட்டது

யாழ் மாவட்டத்தளபதி செல்வராசா

அடக்கப்படுகின்ற மக்கள் நிச்சயமாக கிளர்ந்தெழுந்து போராடுவார்கள் என்பது வரலாற்றின் நியதி அந்த வகையில் தமிழர்களாகிய நாங்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு உரிமைகள் பறிக்கப்பட்டு இருக்கிற நிலையில் இன்று ஓர் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் இவ்வாறு நேற்று நடைபெற்ற மேதின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட தளபதி திரு. செல்வராசா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்,
(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரம் செறிந்த தியாகப்படை எம்மிடமுண்டு

--ஜெயா

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணிலே உலகம் போற்றும் வீரம் செறிந்த ஒரு தியாகப்படையினை எம்முடைய தலைவர் உருவாக்கியிருக்கிறார். தங்களுக்காக வாழாது இந்த மண்ணிலே ஒரு சுதந்திர வரலாறு எழுதப்படவேண்டும் - தமது உரிமைக்காக அந்நியனிடம் அடிபணிந்து போகக்கூடாது. தமது சொந்தப் பலத்திலே நிமிர்ந்து நிற்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் இங்கு ஒரு சந்ததி உயிரையே அர்ப்பணித்துப்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## 57 இராணுவத்தினரைக் காணவில்லையாம்

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் வன்செயல்கள்நடந்தஅழுஞ்சிப்பத்தன என்ற கிராமத்தில் காவலில் ஈடுபட்டிருந்த 57 பேரை இராணுவத்தினரைக் காணவில்லை என சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

வன்செயல் சம்பவங்கள் நடந்த போதுஇவர்கள் பயந்து காடுகளுக்குள் ஓடியிருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகிறது.

## முஸ். ஊர்காவற்படையால் 12 தமிழர் கடத்தல்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் கடந்த புதன்கிழமை வன்செயல்கள் நடந்த பகுதியிலிருந்து இன்னும் பன்னிரெண்டு தமிழ் மக்கள் காணாமற் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்ற புதன்கிழமை காலை அழுப்பொத்தனைக்கு அருகேயுள்ள கிராமத்தில் பன்னிரெண்டு தமிழ் மக்கள் ஆயுதந்தாங்கியவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர். இவர்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடத்திச் செல்லப்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என நம்பப்படுகின்றது.

இதேவேளை பொலநறுவ மாவட்டத்தில் முஸ்லிம்களால் கொல்லப்பட்ட தமிழரின் என்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித்தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வானில் விமானங்கள் நோட்டமிட குடியிருப்புகள் நோக்கி கடற்படை பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டது. நேற்று பகல் 11.30 மணியளவில் சிறிலங்கா வேவு விமானம் ஒன்று சேந்தான்குளம், மாதகல், திருவடிநிழல்பகுதிக்கடற்கரையை அண்டிய மக்கள் குடியிருப்புகள் மீது பலதடவைகள் வட்டமிட்டு நோட்டம் விட்டது.

இதன் போது மாதகல் கடற்பரப்பில் தரித்து நின்ற கடற்
(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

2ஆம் லெப்டினன்ட் இளந்தேவன்



ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் 30.4.92 அன்று இடம் பெற்ற திடீர் மோதலில் 2ஆம் லெப்டினன்ட் இளந்தேவன் (தர்மலிங்கம் ராஜேஸ்வரன் உரும்பராய் வடக்கு) என்னும் போராளி வீரச்சாவு அடைந்தார்.

## வரி விளம்பரம்

### உணவு தயாரிப்பும் சுகாதாரமும்

ஸ்ரீ லங்கா அரசாங்கம் யாழ்ப்பாண பிரதேசத்துக்கு போதிய மருந்தை பல ஆண்டுகளாக அனுப்புவதில்லை உணவை மருந்தாக கைக்கொண்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்போம்
எல்லாம் இலவசம்
முகவரி கதிர்காமத்தம்பி ஜெகநாதன், பொதுசுகாதார விரிவுரையாளர், 66, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
(2521)

### சோதிடம்

உங்கள் எதிர் காலம் எப்படி அமையப் போகின்றதோ என்று சிந்திக்கும் வேளையில் வேலணை சோதிடர் சிவராசா அவர்களை ஒரு முறை சந்தித்துப் பார்க்கலாமே? 152 B அரசடி வீதி, கந்தர்மடம். (2525)

## தீவிர சிகிச்சை பிரிவில் சின்னசாந்தன்

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக சென்னையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சின்னசாந்தன் சென்னை பெரியாஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இது வரை செங்கல்பட்டு சிறையில் இருந்தவராவர்.

## இந்திய வம்சாவழி எனப்பதியவும்

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள இந்திய வமசாவழி மக்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யும்போது தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினர் என்ற அடிப்படையில் பதிவு செய்யும்படி கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ் செல்லச்சாமி கோரியுள்ளார்.

கொழும்பில் இலங்கையில் உள்ள பிரதி இந்தியத் தூதுவரைச் சந்தித்து இது குறித்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர்களது பிள்ளைகள் தமிழகத்தில் கல்வி பயில சகல வசதிகளையும் செய்து கொடுக்கவும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## விளக்க மறியலில் பொலிசார்

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டின் கீழ் இம் மாதம் பதினோராம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டு உள்ளனர்.

வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் தற்காலிக வேலை நீக்கத்திற்கு உள்ளான இவர்கள் வாழைச்சேனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது நீதிவான் சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## பெற்றுக் கொள்ளவும்

(மண்டைதீவு)

புங்குடுதீவு ப நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் க.சிவகுமார் ஆண்டு 9 க. யோககுமார் ஆண்டு 6 என்பவர்களுடைய ஐப்பசி (1991), மாசி (1992) மாதங்களுக்கான நான்கு மதிய உணவு முத்திரைகள் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும். (88)

## உபாலி பத்திரிகை கம்பனி ஊழியர் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

ஐலண்ட், திவயின, போன்ற பத்திரிகைகளை வெளியிடும் உபாலி பத்திரிகைக் கம்பனியின் ஊழியர்கள் நேற்று முன்தினம் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் ஊழியர்கள் ஏதேச்சாதிகாரமான முறையில் வேலை நீக்கம் செய்யப்படுவதைக் கண்டிக்கும் வகையில் இவ் வேலை நிறுத்தம் நடத்தப்படுவதாக தெரிவித்த தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர், இப் பத்திரிகை கம்பனியின் வரலாற்றில் சுதந்திரமான தொழிற்சங்க மொன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## மீன் பரிசீலனை

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றியும், இன்னமும் நிரந்தர நியமனம் கிடைக்காத தொண்டர் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளன. அம்பாறை கல்வி கந்தோரில் இம் மீள் பரிசீலனை நடைபெறும். எனத் தெரிய வருகிறது.

### சுகாதார சேவைகள் திணைக்களம்
## கேள்விப் பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் விக்டோரியா வீதி இலக்கம் 57-ல் இயங்கும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கட்டிடத்தின் பின்பகுதி ஓட்டுக் கூரையின் கீழ் பாய்த்தட்டி அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க விரும்புவோர் மேலும் விபரங்களுக்கு உடனடியாக இப்பணிமனையுடன் தொடர்பு கொள்ளவும்.

1992-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதிக்கு முன் கேள்விப்பத்திரங்களை ஒரு பிரதிகளில் தயாரித்து இப் பணிமனையில் சமர்ப்பிக்க வேண்டும்.

சு. சே. பி, பணிப்பாளர்
(சி 4351) 30.04.92

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. சைவசித்தாந்தப் பேராசிரியர் (அறக்கொடைத்தவிசு)
2. இந்து நாகரிகப் பேராசிரியர்.
3. பொருளியற் பேராசிரியர்.
4. வர்த்தகப்பேராசிரியர்
5. வியாபார நிருவாக பேராசிரியர்.
6. கல்வியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

7வர்த்தகத்தில் / .முகாமைப்படிப்புகளில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11 / உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்)

பதவி (6) - பட்டப்படிப்புத்தரத்தில் கணிதத்தினை ஒரு பாடமாக கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண் என்ற பதவிப்பெயரில் நியமிக்கலாம்என்பதுடன் துணைவேந்தர் அவரைரூபா4500/-10 x 200-6500/-(மாதமொன்றுக்கு சம்பள அளவுதிட்டத்தில் வைக்க முடியும்)

சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர் ரூபா 12,200-6x300- 14,000/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 ரூபா 9,600-8x 250 - 11,600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் 11 ரூபா 8,000 -5x 250- 9 250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர் ரூபா 3,900/- மாதமொன்றுக்கு [நிலையானது][தகுதிகாண்] ஆண்டு ஒன்றுக்கு

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 1992 07 18 ஆகும். ஏனைய பதவிகளுக்கு முடிவுத்திகதி 1992.06.6 ஆகும்.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும் தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள் 23 x 10 சதம மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்தில் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம், திருநெல்வேலி யாழ்ப்பாணம்.
1992-04-30 [4354]

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கும்
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4-00, 6-00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4347)

### சங்கானை
### பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

## முக்கிய அறிவித்தல்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கிவரும் கிளைகளில் அங்கத்தவர் இடாப்பு 30-06-92 உடன் பூரணப்படுத்தி வாக்காளர் பட்டியல் தயாரிக்க வேண்டியிருக்கிறது.

இதுவரை இச்சங்கத்தில் அங்கத்தவராகச் சேராதவர்கள் 30-06-92 க்கு முன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கிளைகளில் முழுப் பங்குப் பணமாக ரூபா 10/- செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அங்கத்தவர் விண்ணப்பப் படிவங்கள் கிளை முகாமையாளர்களிடமிருந்தும், சங்கத் தலைமைக் காரியாலயத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம். முழுப் பங்குப் பணமாக ரூபா 10/- இன் மிகுதியைச் செலுத்தாதவர் செலுத்திப் பூரணப்படுத்திக் கொள்ளவும். ரூபா 10/- செலுத்திய அங்கத்தவர்களே கிளைக் குழுத் தேர்தலில் பங்குபற்றவும் வாக்களிக்கவும் தகுதியுடையவராவர்.

### உறுப்புரிமைத் தகைமை:

இச் சங்கத்தின் தொழிற்பரப்பிலே வழக்கமாக வசிப்பவரும் அல்லது வேலை பார்ப்பவரும் அல்லது அசைவற்ற ஆதனம் உடையவரும், 18 வயதிற்குக் குறையாதவரும் சங்கத்தில் உறுப்புரிமை பெறத் தகைமை வாய்ந்தவராவர்.

பொதுமுகாமையாளர்
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(சி/4348)

## நினைவு கூருகின்றோம்...
## 1992-05-02

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் திராட்டிக்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய
**கர்ணன்** (ஆனந்தநாதன் - ஆலங்குளம், பூநகரி, மன்னார்)

மன்னார் நாச்சிக்குடாப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய
**2ஆம் லெப். சைமன்** (அன்ரன் - தாமரைக்குளம், அடம்பன், மன்னார்)

1989 ஆம் ஆண்டு பருத்தித்துறை, 1ஆம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய
**கப்டன் குட்டி / தரன்** நாகராசா ஞானகுலசிங்கம் ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழ்மக்கள்.

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய
**ஜெயக்கொடி** (கந்தையா இராசபதி - காஞ்சூரை மோட்டை, நெடுங்கேணி. மணலாறு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4353)

யாழ்ப்பாணம்

# ஜெயலலிதா - ரஜனிகாந் பனிப்போர்

தமிழக முதலமைச்சர் வசிக்கும் போயஸ் தோட்டம் பகுதியில் சிங்கத்தின் குகைக்கு வெகு அருகிலேயே மக்களைக் கவர்ந்திழுக்கும் இன்னொரு மனிதர் இருக்கிறார் அவர் தான் நடிகர் ரஜனி காந்த்.

ஜெயலலிதா முதல்வரான பின் அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகம்! எதைப் பற்றியும் கவலைப்படாமல் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் தினமும் போயஸ் தோட்டத்திற்கு ரஜனிகாந்தைப் பார்க்க வரும் ரசிகர்கள் கூட்டம் ஏராளம்.

ஜெயலலிதா முதல்வராவதற்கு முன்பே இந்த ரசிகர் படையெடுப்பு அன்றாட வாடிக்கை! ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்றதும். போயஸ் தோட்டத்தில் திடீர் திருப்பங்கள் ஏற்பட்டன.


அந்தச் சாலைக்குள் வருகிற கூட்டம் ஜெயலலிதாவுக்காக - ரஜனிகாந்துக்கா என்கிற குழப்பம் ஏற்பட ஆரம்பித்தது. பல அ.தி.மு.க முக்கிய பிரமுகர்கள் ''நம்ம புரட்சித் தலைவி இருக்கிற தெருவிலேயே இருந்துக்கிட்டு இந்த ஆள் எப்படி தனக்குக் கூட்டம் சேர்க்கலாம்?'' என்று முணு முணுக்க ஆரம்பித்தார்கள். முதல்வருக்கு ஜால்ரா அடிக்கடி இதையே ஆயுதமாகப் பயன்படுத்த ஆரம்பித்தார்கள். ''ரஜனி தனக்கென்று ஒரு பெரும் மக்கள் கூட்டத்தைத் தயார்ப்படுத்தி வருகிறார்'' என்று முதல்வரின் காதுபடப் பேச ஆரம்பித்தார்கள்.

இது ஒரு புறமிருக்க-முதல்வர் வீட்டுக்கு அருகிலேயே தானும் வசிப்பதால் ஜெயலலிதா ஆட்சிப்பொறுப்பு ஏற்றதும். தன் மனைவியுடன் முதல்வரைப் பார்த்து ஒரு சம்பிரதாய சந்திப்பு ஏற்படுத்திக் கொண்டுவந்தார் ரஜனிகாந், இந்தச் சந்திப்புப் படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

அதற்குப் பின், போயஸ் தோட்டத்துக்கு வரும் அப்பாவி அ.தி.மு.க. தொண்டர்களும் கூட ''நம் முதல்வருக்கு வேண்டியவர் ரஜனிகாந்'' என்ற நினைப்போடு ரஜனிகாந் வீட்டிற்கும் செல்லத் துவங்கினார்கள். இதனால் மேலும் அங்கு குழப்பம்.

அதன் அடுத்த கட்டமாக-போயஸ் தோட்டத்துப் பாதுகாப்புக் கெடுபிடிகள் ரஜனிகாந் ரசிகர்கள் மீதும் பாயத் தொடங்கின. சில நாட்கள் போயஸ் தோட்ட எல்லையிலேயே அவர்களுக்குத் தடை போடப்பட்டது, பிறகு தடை நீங்கியது. ரஜனிகாந்தின் உண்மையான செல்வாக்கை தெரிந்துகொள்ளும் வேலையில் இறங்கிய தமிழகபொலிஸ் மூன்று தலைமுறைகளைத் தன்பக்கம் இழுத்து வைத்துக் கொண்டிருக்கிறார். தமிழகத்தில் மூலைமுடுக்குகளில் எல்லாம் கூட ரஜனிகாந்திற்கு நல்ல செல்வாக்கு என்று ஆளுங் கட்சிக்குத் தகவல் கொடுத்தது.

அதன் பிறகுதான் ரஜனி ரசிகர் மன்றங்களுக்குப் பிரச்சினை அதிகமானது. மாவட்டவாரியாக ரஜனி மன்றங்களைக் கவனிக்க ஆரம்பித்தது ரகசியப் பொலிஸ். ரஜனியின் பேட்டிகள், விழா பேச்சுக்கள், அவர் படத்தில் வரும் காட்சிகள், வசனங்கள் எல்லாவற்றையுமே கவனிக்கத் தொடங்கியது காவல்துறை.



இந்தச் சமயத்தில் ரஜனிகாந்தின் 'தளபதி' படம் தீபாவளி சமயத்தில் வெளிவந்தது. பொலிஸ் கெடுபிடிகள் மற்றும் அடக்குமுறைகளினால் வெறுத்துப் போயிருந்த ரஜனி ரசிகர்கள் உணர்ச்சி வசப்பட்டு திருச்சியில் ஒரு போஸ்டர் ஒட்டினார்கள். அதில் கருணாநிதி, ஜெயலலிதா, ரஜனி மூவரின் படத்தைப் போட்டு 'நேற்று. இன்று நாளை' என்று எழுதினார்கள். இந்தப் போஸ்டர் பெரும் விபரீதத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கவில்லை ரசிகர்கள். 'எங்கள் தலைவி ஆட்சிக்கு வந்த நான்கு மாதங்களுக்குள் நாளைய முதல்வரைப் பற்றிப் பேசுவதா?' என்று கொதித்தெழுந்தார்கள் அ.தி.மு.க. வினர். விளைவு பொலிஸ் உதவியுடன் மிக அவசரமாக அந்தப் போஸ்டர்கள் இரவோடு இரவாகக் கிழித்தெறியப்பட்டன. அ.தி.மு.க. தொண்டர்கள் - ரஜனி ரசிகர்கள் மோதல் எழுந்தபோது ரஜனி ரசிகர்கள் கைது செய்யப்பட்டார்கள் பொலிஸ் காவலில் ரஜனி ரசிகர்களுக்குச் சரியான கவனிப்பு. பொலிஸ் மிரட்டல்கள் இருந்த போதும்- திருச்சி, மதுரை மற்றும் தென்மாவட்ட ரஜனி ரசிகர்கள் கூட்டம் போட்டு 'யார் தடுத்தாலும் எங்கள் அண்ணன் ரஜனிதான் தமிழகத்தின் அடுத்த முதல்வர்' என்று வெளிப்படையாக ஆக்ரோஷமாகப் பேச ஆரம்பித்தார்கள். மன்றங்களின் வேகம் அதிகமான போது கைது செய்யப்பட்ட திருச்சி ரசிகர்கள் நல்ல 'கவனிப்புக்கு' ஆளானார்கள்.

திருச்சி முழுவதும் தொடர்ந்து பல வழக்குகளில் ரஜனி ரசிகர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்தச் செய்திகள் தலைமைப் பீடமான ரஜனி வீட்டிற்கு அவ்வப்போது தெரிவிக்கப்பட்டன. ஆனாலும் ரஜனி அமைதியாகவே இருந்தார்.

இந்தச்சூழ்நிலையில் சென்ற வருடம் டிசம்பர் 12ஆம் திகதி ரஜனிகாந்தின் பிறந்ததினம்... அப்போது ரஜனிகாந் ஊட்டியில் இருந்தார். பிரச்சினை வருமென்று எதிர்பார்த்து சென்னை வரவில்லை. தன் ரசிகர்கள் தன் வீட்டிற்கு வந்து பொலிஸ் கெடுபிடிகளில் சிக்கக்கூடாது என்பதால், இரண்டு நாட்கள் முன்பே தான் ஊரில் இல்லாத காரணத்தால் ரசிகர்கள் தன் பிறந்த நாளன்று வீட்டுக்கு வர வேண்டாமென்று பத்திரிகைகளில் விளம்பரம் கொடுத்தார்.

உடனே ரசிகர்கள் தங்கள் சொந்த ஊர்களில் ரஜனிக்கு விழா எடுக்க முடிவு செய்தார்கள். எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் முதல் முறையாகத் தமிழக மெங்கும் ரஜனி பிறந்த நாளைக் கோலாகலமாகக் கொண்டாடினார்கள்.

ரஜனி ரசிகர் மன்றங்களின் இந்த விழாவை தட்டமுடியாத சூழ் நிலை அ.தி.மு.க-காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் பலருக்கு ஏற்பட்டது. பெயர் சொல்ல விரும்பாத தென் மாவட்ட ஆளுங் கட்சி எம். எல். ஏ. ஒருவர் ''தேர்தல் நேரத்தில் ரஜனி ரசிகர்கள் எனக்காகக் கடுமையாக வேலை செய்தார்கள். ரஜனி ரசிகர்கள் எல்லாக் கட்சியிலும் இருக்கிறார்கள். தொகுதியில் நடக்கும் ரஜனி பிறந்த தின விழா கூட்டத்தில் நான் கலந்து கொள்ளாமல் எப்படி இருக்க முடியும்? டிசம்பர் 12-ஆம் திகதி காலையிலிருந்து இரவு வரை தொடர்ந்து பல நிகழ்ச்சிகள். ரஜனியின் செல்வாக்கு எனக்கு பிரமிப்பாகத்தான்இருந்தது .. என்றார் வெளிப்படையாக.

தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் அழகிரி. இவர் அதிகம் சினிமா பார்க்காதவர். டிசம்பர் 12 ஆம் திகதி இவருடைய தொகுதியில் நடந்த பல கூட்டங்களுக்கு ரஜனி ரசிகர்கள் அழைப்பு விடுத்தனர். விழாவுக்குப் பிறகுதான் நான் பழைய ரஜனி படங்களை எல்லாம் பார்க்க ஆரம்பித்தேன். அரசியல் களத்தில் ரஜனி இறங்கினால் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவார் அவர் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவர். '' என்றார்.

இதே பாணியில் ரஜனியின் பிறந்த தினம் தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. ஜெயலலிதாவிற்கு அடுத்தபடியாகப் பெரும் கூட்டம் ரஜனிக்குத்தான் இருக்கிறது. நாளடைவில் அவருக்கு ஆதரவு இன்னும் பெருகும். அதற்கு இந்த பிறந்ததின விழா ஒரு உதாரணம் என்றது பொலிஸ் அறிக்கை.

இதற்குப் பிறகு அ.தி மு.க. ரஜனி ரசிகர்கள் மோதல் மேலும் வலுக்க ஆரம்பித்தது. அதே நேரத்தில், போயஸ் தோட்டத்தில் ஜெயலலிதா- ரஜனி மௌன பனிப்போர் துவங்கியது.

இந்த நேரத்தில் எழுந்தது காவிரிப் பிரச்சினை! கர்நாடகத்தில் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள். அ.தி.மு. வினர் சுறு சுறுப்பானார்கள் அங்கு தமிழர்கள் தாக்கப்படுவதற்குப் பதிலடியாக ஒரு ரஜனியைத் தாக்கினால் போதும்



என்று அ.திமுகழக நிர்வாகிகள் அந்தச் சமயத்தில் வெளிப்படையாகவே பேசினார்கள். சில இடங்களில் ரஜனி தாக்கப்பட்டதாக வதந்தி பரவ பல ஊர்களில் சிலகலவரங்கள் ஏற்பட்டு வழக்குப் பதிவான சம்பவங்களும் உண்டு.

அ. தி. மு. க மேடைகளில் ரஜனி நேரடியாக விமர்சிக்கப் பட்டார். 'கன்னட நடிகர்களுக்கு இங்கே இடமில்லை' என்றனர். அதற்கு உதாரணமாகச் சென்னையிலுள்ள கன்னட நடிகர் ராஜ்குமார் வீடு தாக்கப்பட்டது. நிலைமையின் தீவிரத்தைப் புரிந்து கொண்ட ரஜனி நிருபர்களை அழைத்து 'வீட்டுக்கு வீடு ஒரு ரசிகனை அழைத்துக்கொண்டு போய் கர்நாடகத் தமிழர்களைக் காப்பேன்' என்று அறிக்கை கொடுத்தார். இதற்கு ஜெயலலிதா 'சட்டத்தை எந்த தனிநபரும் கையிலெடுப்பதை அனுமதிக்க முடியாது' என்று வெளிப்படையாகவே ரஜனிக்குக் கடுமையான எச்சரிக்கை விடுத்தார். பின்னர் ரஜனி ரசிக மன்றத்தினர் கர்நாடகத்திலிருந்து வரும் அகதிகளுக்கு உதவச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து பொங்கல் சமயத்தில் ரஜனியின் மன்னன் படம் வெளியானது. 'பாட்டாளி மக்கள் கட்சியின் போர்வையில் 'மன்னன்' படத்திற்கும் பிரச்சினை ஏற்படுத்த முயன்றார்கள் அ தி. மு.க.வினர். மன்னார்குடியில் கூட 'மன்னன்' படத்தை வெளியிடப் பயந்தார்கள். ரசிகர் மன்றங்கள் பொறுப்பெடுத்துக் கொண்டதால் படத்தை வெளியிட்டோம்... என்றார் தஞ்சைப் பகுதி ரஜனி ரசிகர் மன்றச் செயலாளர்.

மன்னன் படம் வெளிவந்தது. அதில் ரஜனி - விஜயகாந் மோதிக்கொள்ளும் காட்சிகளில் ரஜனி - விஜயகாந்தைத் தாக்கிப் பேசும் வசனங்கள் ஜெயலலிதாவை மனதில் வைத்துக்கொண்டு பேசியவைதான் என்று முதல்வர் வரை தகவல் போயிருக்கிறது என்றார் பொலிஸ் அதிகாரி ஒருவர்.

இப்போதும் நிலைமை சீரடையவில்லை. தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவல் என்று முதல்வர் சட்டசபையில் அறிவித்த பிறகு தமிழகம் முழுவதும் தீவிர பொலிஸ் சோதனை. ரஜனி ரசிகர்களிடம் மட்டும் பொலிஸ் விசேட விசாரணை நடத்துகிறது. பலவித மிரட்டல்களுக்கு ஆளாகிறார்கள் .....'' என்றார் ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவர்.

ரஜனிக்கு நெருங்கிய திரைப்படப் பிரமுகர் ஒருவர் அவரைப் பற்றி தெரிவிக்கும் போது ''ரஜனியின் பலம் - பலவீனம் இரண்டுக்குமே சட்டென்று முடிவெடுக்கும் குணம்தான் .... அவமானங்களை ஓரளவுதான் பொறுத்துக்கொள்வார். பிரச்சினைகள் தொடர்ந்தால் சும்மா இருக்கமாட்டார்...'' என்று குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து ரஜனியின் அன்றாட நடவடிக்கைகளைக்கூட பொலிஸ் கண்காணிக்கிறது.

சமீபத்தில் பொலிசார் முதல்வருக்குக் கொடுத்த அறிக்கையில்,

'ரஜனிகாந்த்'- திருநாவுக்கரசு சந்திப்பு நான்கு முறை நடந்தது. அரசியலில் பிரவேசிக்க திருநாவுக்கரசு பலயோசனைகள் தெரிவித்தாராம், இன்னும் இரண்டு ஆண்டுகள் நேரடி அரசியலில் ஈடுபட வேண்டாம், கட்சி துவங்க வேண்டுமென்றால் நிறையப் பணம் தேவைப்படும். அரசியல் பின்னணிக்கு உதவத் தயாராக இருக்கும் தொழிலதிபர் பலருக்கு சினிமா ஆசை உண்டு. அவர்களுக்கு படம்பண்ணுங்கள்...உதாரணமாக உடையார், அருணா சுகர்ஸ் அதிபர் இந்த இரண்டு ஆண்டுகளில் ஜெயலலிதாவின் செல்வாக்கும் குறையும். அது உங்களுக்கு உதவும் என்று ரஜனிக்கு ஆலோசனை சொன்னார்' என்று தெரிவித்திருந்தது. இந்த விடயத்தில் காங்கிரஸ் எம்.பி யான அடைக்கலராஜின் நேரடி ஆதரவும் ஆர். எம். வீயின் மறைமுக ஆதரவும் ரஜனிக்கு உண்டு என்றும் சொல்கிறது பொலிஸ் குறிப்பு.

நன்றி- ஜூனியர் விகடன்

---

மத்திய - மாநில அரசுகளிடையே

# சுமுகமான உறவு நிலை தொடரும் என நம்பிக்கை

\- முதல்வர் ஜெயலலிதா

(சென்னை)

மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பிற்கு விமான நிலையம் அமைத்தது ஒரு மைல்கல் என்று தூத்துக்குடி விமான நிலையத் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் சென்னையில்எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் உதவியுடன் ஏரோமெட்டிக் தொழிற்சாலை நிறுவுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கும் விடயத்தை பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தொலைபேசி மூலம் தமக்குத் தெரியப்படுத்தியதாகக் கூறி நன்றி தெரிவித்தார். அத்துடன் மத்திய - மாநில அரசுகளுக்கிடையே சுமுகமான நிலை என்றென்றும் பேணப்படும் என்பதையே இது எடுத்துக் காட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

# வியட்நாமிற்கு எதிரான பொருளாதார தடை நீக்கம்

(வாஷிங்டன்)

வியட்நாமுக்கு எதிராக இருபத்தியெட்டு வருடங்களாக அமுல் படுத்தப்பட்டு வந்த பொருளாதாரத்தடையை நீக்கியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

வியட்நாம் யுத்தத்தின் போது காணமல்போன அமெரிக்கபடையினர் தொடர்பான பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு வியட்நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் இந்தத் தடையை நீக்குவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மருந்து வகைகள் கல்விச் சாதனங்கள் உடுபுடைவைகள் உட்படஅத்தியாவசியபொருள்களை வியட்நாமுக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும்,

அரச சார்பற்ற நிறுவனங்கள் வியட்நாமில் மனிதாபிமான அடிப்படையில் திட்டங்களை மேற்கொள்வதற்கும் அமெரிக்க வெளிநாட்டுத் திணைக்களம் அனுமதித்துள்ளது.

# தோ. தொழிலாளர் விவ. நிலங்கள் அவர்களுக்கே உரிமையாகும்

(கொழும்பு)

தோட்ட தொழிலாளர்கள் விவசாயம்செய்து வரும் காணிகளும், வீட்டுத் தோட்டங்களும் அவர்களுக்கே சொந்தமாக்கப்படும் என்ற ஒரு தீர்மானம் கடந்த புதன்கிழமை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைத் தொழில் விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கா தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டிலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் காணிகளை வேறு நபர்கள் அனுபவிப்பதோ அன்றி ஆக்கிரமிப்பதோ சட்ட ரீதியாக தடை செய்யப்படும் என்றும் அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ். இந்து, வேம்படி ஆசிரியர் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை சபை தேசிய பாடசாலைகளான யாழ். இந்து, வேம்படி மகளிர் கல்லூரிகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை வெளியிட்டுள்ளது. இவ் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் சேவையிலுள்ள மாற்றம் விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து வின் ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

வேம்படி மகளிர் கல்லூரியில் 2 பட்டதாரி (பௌதிகம்) 2 பட்டதாரி (உயிரியல்), 4 கலைப் பட்டதாரி, 3 பயிற்றப்பட்ட கணித ஆசிரியர், 1 பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர், 1 பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியர், 1 நடனம், 1 மேலைத் தேச சங்கீதம் ஆகிய ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன.

யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்புக்காக 2 பட்டதாரி (இரசாயனம்) 3 பட்டதாரி (பௌதிகம்) 1 பட்டதாரி (கணிதம்) ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. மேலும் இக் கல்லூரியில் ஆண்டு 6— 11ற்காக பயிற்றப் பட்ட தமிழ்—2, சமூகக்கல்வி —1, விஞ்ஞானம்—1 ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

## பெற்றுக் கொள்ளவும்

721551059V என்ற இலக்கமுடைய மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவசுந்தரம் கர்ணன் என்பவரது அடையாள அட்டை எமது காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

நவாலியைச்சேர்ந்த செல்வராஜா என்பவர் இதனை யாழ். பஸ்தியான் சந்தியில் கண்டெடுத்து எம்மிடம் ஒப்படைத்துள்ளார். உரியவர் வந்து பெற்றுச்செல்லவும்.

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் இருவர் யாழ். வந்துள்ளனர். இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மருத்துவ பிரிவுக்கு பொறுப்பாக இருக்கும் டாக்டர் ஒருவரும் மற்றும் முக்கிய அதிகாரி ஒருவருமே யாழ். வந்தவர்களாவர் இவர்கள் இங்கு நடக்கும் மருத்துவப் பிரச்சினைபற்றி ஆராய்வார்கள் என தெரியவருகிறது. (75)

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் சங்க தூதுக்குழு அடுத்த வாரம் கொழும்பு செல்லவுள்ளது.

தமது நியமனம் குறித்து கொழும்பு செல்லஇருப்பதால் இதுவரை தமது பெயர்களை பதிவு செய்யாத தொண்டர் ஆசிரியர்கள் எதிர்வரும் செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் யாழ். பட்டப்படிப்புக் கல்லூரியில் பதிவு செய்யவும். இவ் அறிவித்தலை யாழ். தொண்டராசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. (பா)

## வடக்கு-கிழக்கிற்கு 74 திட்ட அமுலாக்க உத்தியோகத்தர் நியமனம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கு 74 திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களை வடக்குக் கிழக்கு மாகாண சபையின் நிதி திட்டமிடல் அமைச்சு நியமனம் செய்துள்ளது.

இனிமேல் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்தே அபிவிருத்தி வேலைகள் உதயமாக இருக்கின்றன என்றும்,

இந்த 74 உத்தியோகத்தர்களும் ஏப்ரல் மாதம் முதல் செயல்பட்டு வருகிறார்கள் என்றும்,

அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் பன்னிரண்டு பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சார்த்திகள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியின் இறுதி ஆண்டுப் பரீட்சையும் முதலாமாண்டு பரீட்சையும் யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை நடைபெறவில்லை.

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை வினாத்தாள்கள் வந்து சேராமை காரணமாக நடைபெறவில்லை

கிளிநொச்சி வரை மேற்படி வினாத்தாள்கள் எடுத்து வரப்பட்டுவிட்டதாக கூறப்பட்டதனால் பரீட்சார்த்திகள் வெகு நேரம்வரை காவலிருந்த போதும் மாலை ஆறு மணியாகியும் வினாத்தாள்கள் வந்துசேரவில்லை எனத் தெரியவருகிறது

இப் பரீட்சை நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

## இலங்கைக்கான விசா திருச்சியில் அலுவலகம்; செல்லச்சாமி கோரிக்கை

(கொழும்பு)

திருச்சியில் இலங்கைக்கான விசா வழங்கும் அலுவலகம் ஒன்றைத் திறக்கும் படி கைத் தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கேட்டுள்ளார்.

சிறிலங்கா பிரதமரும், நிதியமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமாகிய டி. பி. விஜயதுங்காவிடம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

## ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் பழுதடைந்த தானியம்

(யாழ்ப்பாணம்)

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களால்கொடுக்கப்படும் உப உணவுப்பொருள்கள் சில பாவனைக்கு உதவாதவை என்று முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் ஆர். ரட்ணசபபதி தெரிவித்தார்.

கௌபி, பயறு போன்ற பழுதடைந்த தானிய வகைகளே வழங்கப்படுகிறதென்றும் அவை உபயோகமற்றவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழுதடைந்த உப-உணவுப் பொருள்களை வழங்கினால் பாவனையாளர் அது குறித்த முறைப்பாடுகளை பகுதி சுகாதார வைத்திய அதிகாரியிடம் அல்லது சுகாதார பரிசோதகரிடம் தெரிவிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். ரட்ணசபாபதி கேட்டுள்ளார்.

## மென் பந்து கிரிக்கட் போட்டி

சில்லாலை புனித சூசையப்பர் வாலிபர் சங்கத்தினரால் நடாத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட மென் பந்து கிரிக்கட் போட்டி சில்லாலை சென் யோசப் விளையாட்டு அணியினருக்கும் சங்கானை இந்து வாலிபர் சங்கத்தின் அணியினருக்குமிடையே இன்று மாலை மூன்று மணிக்கு சில்லாலை கலட்டி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## எழுவைதீவு வாசி ஒருவர் யாழ். வந்து சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் எழுவைதீவு வாசி ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம்கொண்டு வந்து விடப்பட்டார்.

சிவம் என்று அழைக்கப்படும் இவர் அரசாங்க உத்தியோகஸ்தராக கடமையாற்றியவராவர். ஒன்பது மாதங்களாக பிள்ளைகளையும், மனைவியையும் பிரிந்துவந்த இவர் எழுவைதீவில் இருந்து கடற்படை மூலம் காங்கேசன்துறை முகாம் கொண்டு வரப்பட்டு பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டார். (75)

---

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் நடாத்தும்

## தமிழிசை விழா

இடம்: நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதி

**முதலாம் நாள் 2-5-1992 சனிக்கிழமை நிகழ்ச்சிகள்**

மாலை 5. 00 மணி முதல் 6. 00 மணிவரை மங்கள இசை

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. ஏ. முருகானந்தம் | திரு. என். ஆர். எஸ். ரவீந்திரன் |
| ,, கே. சிறீதரன் | ,, என். ஆர். எஸ். சுதாகரன் |
| ,, என். ஆர். கே. ரத்னகுமார் | ,, என். முருகானந்தம் |
| ,, என். ஆர். கே. வாகீசன் | ,, பி. குணம் |

தொடக்கவுரை:- திரு. புதுவை ரத்தினதுரை அவர்கள் (பொறுப்பாளர், விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் தமிழீழம்)

**6. 00 மணி தொடக்கம் 7. 00 மணி வரை பாட்டு**

| | |
|---|---|
| செல்வி பரமேஸ்வரி கணேசன் | — பாட்டு |
| திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி | — வயலின் |
| ,, கே. கண்ணதாசன் | — மிருதங்கம் |

**7.00 மணி தொடக்கம் 8. 00 மணி வரை பாட்டு**

| | |
|---|---|
| திரு. கே இராமநாதன் | — பாட்டு |
| ,, எஸ். சர்வேஸ்வரசர்மா | — வயலின் |
| ,, எஸ். மகேந்திரன் | — மிருதங்கம் |

**8. 00 மணி தொடக்கம் 8. 30 மணி வரை சிறப்பு விருந்தினர் உரை**

1. திரு. பரா (அவர்கள் பொறுப்பாளர் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவு)
2. திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர், கம்பன் கழகம்)
3. திரு ஸ்ரனி மாஸ்டர் அவர்கள் (அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் கடற்புலிகள்)

**8. 30 மணி தொடக்கம் 9. 30 மணி வரை பாட்டு**

| | |
|---|---|
| திரு. எஸ். கணபதிப்பிள்ளை | — பாட்டு |
| ,, எஸ் கோபிதாஸ் | — வயலின் |
| ,, எம். சிதம்பரநாதன் | — மிருதங்கம் |
| ,, எஸ். நாகராசன் | — கஞ்சிரா |

**9. 30 மணி தொடக்கம் 10. 30 மணி வரை நாதஸ்வரம்**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. என். கே. பத்மநாதன் | திரு. ஆர். புண்ணியமூர்த்தி |
| ,, எஸ் எஸ். சிதம்பரநாதன் | ,, ரி. உதயசங்கர் |
| ,, ஆர். கேதீஸ்வரன் | ,, எஸ். முருகதாஸ் |

---

## பிறந்ததின வாழ்த்து



**செல்வி ஜெனனா**

பண்டத்தரிப்பு பிரபல வர்த்தகர் கு. நம்பிராசா சாந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெனனா தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (2. 5. 92) சனிக்கிழமை 'ராஜறோஸ்' இல்லத்தில் மிக விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அண்ணன்மார், அக்காமார், அன்ரி, சித்தப்பா, மாமிமார் மற்றும் உறவினர்களும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். (2523)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

இடர்கள் எதிர்ப்படும் போது
தைரியம் செயலில் முனையும்
-ஒவிட்-

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 02-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 65

# தமிழீழ உழைப்போர் பாராட்டிற்குரியவரே

"தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்றது. போராட்டப் பழுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பழுவை மறுதோளிலும் உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழீழப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகின்றேன்'' இவ்வாறு தலைவர் பிரபாகரன் தனது மேதினச் செய்தியில் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினருக்குத் தனது பாராட்டுதலைத் தெரிவித்துள்ளார்.

தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினருக்குத் தலைவர் பிரபாகரன் வழங்கிய இப்பாராட்டானது பெரிதும் பொருந்தும். தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பத்தில் இருந்து தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினர் சொல்லொண்ணாத் துன்பங்களின் மத்தியிலும் உறுதிதளராது வாழ்க்கைப் போராட்டத்துடன் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் முன் எடுத்துச் சென்றுள்ளனர்.

சிறிலங்கா இராணுவத்தின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளும், இனப்படுகொலைகளும் தமிழ் மக்கள் அனைவருக்கும் சொல்லொணாத் துன்பங்களையும், துயரங்களையும் கொடுத்தது. அதிலும் குறிப்பாகப் பாட்டாளி வர்க்கம் அடைந்த துயர் அளவிட முடியாதது. இப்பாட்டாளி மக்களின் தொழில் நிலையங்கள் அழிக்கப்பட்டன; உற்பத்தி நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன; தொழிலில் ஈடுபட முடியாது தடுக்கப்பட்டார்கள்; அவர்களின் குடியிருப்புகள் அழிக்கப்பட்டன; மக்கள் அகதிகளாக விரட்டப்பட்டனர்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதாரத் தடையானது தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தினரின் மீதமிருந்த சகல பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினரை மேலும் நசுக்கியது. அத்தோடு பொருளாதாரத் தடையைத் தமக்குச் சாதகமாக்கிய முதலாளிகளும் பாட்டாளி மக்கள் மீது மேலும் சுமைகளைச் சுமத்தினர். இதனால், தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினர் ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இருப்பினும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தினர் சளைத்து விடவில்லை. இரண்டு சக்திகளுக்கும் எதிராக உறுதியாக நின்று உழைத்தது. சிறிலங்கா அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையைத் தனது கடினமான உழைப்பால் உடைப்பதில் தீவிர பங்காற்றியது. சுய பொருளாதார உற்பத்தியிலும் பொருளாதாரத் தடையை மீறிப் பொருள்களைக் கொண்டு வந்து சேர்ப்பதிலும் பெரும் பங்காற்றினர். இதே வேளை, போர்முனைகளிலும் போராளிகளுக்கு உறுதுணையாக நின்று தேசிய இனப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் பேருதவி புரிந்தது

பாட்டாளி மக்களின் இப்பங்ளிப்பானது தேசிய இனப்போராட்டத்தை இராணுவ அடாவடித்தனங்கள் மூலமும், பொருளாதார தடைமூலமும், அழித்துவிடலாம் என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் எண்ணத்தை முறியடித்தது; அத்தோடு போர் தீவிரமடைய அடைய வசதி படைத்தவர்கள் மண்ணை விட்டுவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கையிலும் சளைக்காது, விடுதலைக்காக உழைத்த இப் பாட்டாளி வர்க்கமானது சிறிலங்கா பேரினவாதிகளுக்கு ஒரு சவாலாகவும் அமைந்துள்ளது.

இந் நிலையில், தமிழ்ப்பாட்டாளி வர்க்கத்தினர் பாராட்டப் பட வேண்டியவர்கள் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

# யுத்தம் அல்ல அரசியல் தீர்வே இன்றையதேவையென வலியுறுத்து

- லலித் அத்துலத் முதலி

(கொழும்பு)

வடக்கு - கிழக்குயுத்தத்தை தொடரவிட முடியாது. இதனால் எமது பொருளாதாரம் சீர்குலைந்து அப்பாவி உயிர்கள் பலியாகின்றன. யாழ். பகுதி மக்கள் இன்று சொல்லொண்ணா துயரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பிரச்சினைக்கு இன்றைய முக்கிய தேவை அரசியல் தீர்வே என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரமுகர் லலித்அத்துலத்முதலி தெரிவித்தார்.

தெரணியகலை பொது விளையாட்டுத் திடலில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், யுத்தத்தினால் எதையும் சாதித்து விட முடியாதென்பதை இரு சாராரும் உணர்ந்து தீர்க்கமானதும் இறுதியானதுமான முடிவைக் காண முன்வர வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வு காண வேண்டுமென நாம் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளோம். இன்றைய நிலையில் புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக இல்லை. அவர்களைத் தனிமைப்படுத்தி அதன் பின்னர் சகல அரசியல் கட்சிகளையும் ஒன்று கூட்டிப் பேச்சுவார்த்தை நடத்தி இறுதியான முடிவு காண வேண்டும். தனிப்பட்ட ஒரு கட்சியினால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவு காண முடியாது.

இன்று நாட்டில் வறுமை அதிகரித்து வருகின்றது. உணவு முத்திரைகளும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. இதற்கு காரணம் அரசாங்கம் உலக வங்கியின் தாளத்திற்கு ஆட்டம் போடுவதே. அரசு பதவிக்கு வரும் போது உணவு முத்திரை பெறுபவர்களின் எண்ணிக்கை பத்தொன்பது லட்சமாக இருந்தது. இது இப்போது பத்து லட்சமாகக் குறைந்துள்ளது என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

## ஐ. தே. க. மேதினத்தில்

# இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார செயலாளர்

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகாரச் செயலாளரும், இந்திராகாங்கிரஸ்கமிட்டி உறுப்பினருமான ரொமேஷ் பண்டாரி தேசிய மேதின விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு கொழும்பு வந்துள்ளார்.

சிறிலங்கா ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் காலி முகத்திடலில் ஏற்பாடு செய்யும் தேசிய மேதின விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ஷாபீர் முகமது பட், பங்களாதேஷ் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தார் ஆகியோரும் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர்.

## தடகள விளையாட்டுப்போட்டி

(கொழும்புத்துறை)

யாழ். தனங்கிளப்பு பண்டிதமணி சி. க. அறவழிப் பாலர் பாடசாலையும், தனங்கிளப்பு மறுமலர்ச்சி இளைஞர் கழகமும் இணைந்து நடாத்தும் வருடாந்த இல்லத் தடகள விளையாட்டுப் போட்டி தலைவர் அபிவிருத்திச் சபை, அறவழிப் பாலர் பாடசாலை, திரு. ந. குமாரதேவன் தலைமையில் இன்று சனிக்கிழமை பி. ப. 1.00 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக தென்மராட்சி பிரிவுச் செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பங்குபற்றவுள்ளார். (24)

## கோதுமை மா, அரிசி

# இப்போது தேவையில்லை அரச அதிபர் அறிவித்தார்

- கிறிஸ் டி.சில்வா

வடக்கிற்கு கோதுமை மா, அரிசி என்பவற்றை இப்போதைக்கு அனுப்பவேண்டாம் என்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் தற்போது கோதுமை மா, அரிசி என்பன போதுமான அளவில் இருப்பதாகவும் மறு கோரிக்கை வரும் வரை இவற்றை அனுப்ப வேண்டாமென்று யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அறிவித்திருப்பதாக புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சின் செயலாளரும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருமான கிறில் டி. சில்வா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் ஆறாயிரம் மெற்றிக் தொன் அரிசி, ஐயாயிரம் மெற்றிக் தொன் மா ஆகியன கையிருப்பில் இருப்பதாக அறிவித்திருந்த போதும் மேலதிகமாக இரண்டாயிரத்து ஐந்நூறு மெற்றிக்தொன் அரிசி இரண்டாயிரம் மெற்றிக் தொன் மா ஆகியவற்றை அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்.

# புலிகளைத் தடைசெய்க இ. ஐ. பொ. கட்சி கோரிக்கை

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்யும்படி இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கிளை இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. குண்டூரில் நடைபெற்ற அக்கட்சியின் பொதுக்குழுவில் இக்கோரிக்கை கொண்டுவரப்பட்டுள்ளதாக அக்கட்சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் தா. பாண்டியன் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

# 3 லோக்சபா தொகுதிகளுக்கு இடைத்தேர்தல்

(டில்லி)

இந்தியாவில் வெவ்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து மூன்று பாராளுமன்றத் தொகுதிகளுக்கும், இருபத்தைந்து சட்டப் பேரவைத் தொகுதிகளுக்குமான இடைத்தேர்தல் யூன் மாதம் 8 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒரு அறிவிப்பு இந்த மாதம் 7 ஆம் திகதி வெளியிடப்படும் என்றும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் மே மாதம் 14 ஆம் திகதிக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டுமெனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பழனி தொகுதியிலும் இடைத்தேர்தல்நடைபெறும்.

# ஆப்கான் புதிய அரசுக்கு இந்தியா அங்கீகாரம்

ஆப்கானிஸ்தானில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் இடைக்கால நிர்வாக சபையை அந்நாட்டின் அரசாங்கமான இந்தியா உத்தியோக பூர்வமாக அங்கீகாரம் செய்வதாக அறிவித்துள்ளது. இந்தியாவின் வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெரஸ்றோ லோக் சபாவில் விடுத்த அறிக்கையில் காபூல் அரசாங்கத்துடன் நீடித்த ஆக்கபூர்வமான - பயனுள்ள பேச்சு வார்த்தைகள் நடத்தும் வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தார். அத்துடன் ஆப்கானிஸ்தானுக்கான புதிய இந்தியத் தூதுவரை ஆப்கான் அதிபர் ஜிப்பத்துல்லா முஜாகுதின்வரவேற்றிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் ஆப்கானிஸ்தானில் அமைதியும் இயல்பு நிலையும் மீண்டும் ஏற்படுத்தப்படுமென இந்தியா நம்புவதாகவும், ஆட்சியுரிமை பெற்ற மண்டல சார்பற்ற சுதந்திரஆப்கானிஸ்தான் அரசொன்றையே இந்தியா எப்போதும் ஆதரித்து வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

# அமெ. பிரஜை இருவரை ஒப்படைக்க கோரிக்கை

1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பார்படா அருகேகியூபா நாட்டு விமானமொன்றை குண்டு வைத்து தகர்த்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் இருவரையும் தமது பிரஜைகளாக வைத்திருக்கும் அமெரிக்கா அவ் இருவரையும் கியூபாவிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரப் பட்டுள்ளது. இச் சம்பவத்தில் எழுபத்து மூன்று பேர் கொல்லப்பட்டதுடன், கியூபாவில் நாசகாரச் செயல்களில் ஈடுபடுவதற்காக அமெரிக்கா சிலருக்கு பயிற்சி அளித்திருப்பதாகவும் கியூபா கூறியுள்ளது.

# பிரேமதாசாவின் பேச்சிற்கு இந்தியா பலத்த கண்டனம்

[டில்லி]

இலங்கையில் பணிபுரிந்த இந்திய இராணுவத்தினரை ஆக்கிரமிப்பு இராணுவம் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டிருப்பதற்கு இந்திய அரசு வன்மையான ஆட்சேபம் தெரிவித்துள்ளது

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் என் என்.ஜா இது சம்பந்தமான ஆட்சேபக் குறிப்பு ஒன்றை சிறிலங்கா வெளியுறவு செயலர் பேர்னாட் திலகரத்தினாவிடம் நேற்று முன்தினம் கையளித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் வழக்கமான நல்லுறவை பாதிக்கக்கூடிய விடயமாக இது அமைந்திருப்பது இந்திய தூதுவரகம் அளித்த குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

இந்திய இராணுவம் இலங்கையின் உறுதிப்பாட்டிற்கும் இன ஒற்றுமைக்கும் என மகத்தான பல தியாகங்களைச் செய்துள்ளமையை இலங்கை அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும் எனவும் அந்த ஆட்சேப குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுவிட்சர்லாந்திலிருந்து கிட்டு வெளியேறினார்

(ஜெனிவா)

சுவிட்சர்லந்தில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களில் ஒருவரான கிருஷ்ணகுமார் (கிட்டு) சுவிட்சர்லாந்து தேசத்தை விட்டுத் தானாகத்தான் வெளியேறினாரே தவிர, அரசு அவரை நாடு கடத்தவில்லை — இவ்வாறு அகதிகள் விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் பீற்றர் ஆர்பன் தெரிவித்தார்.

கிட்டு எங்கு புறப்பட்டுச் சென்றார் என்று தெரியவில்லை அவர் சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சப் கோரவில்லை. எனவே அவருக்குத் தஞ்சம்வழங்க சுவிட்சர்லாந்து அரசு மறுத்துவிட்டது என்ற பேச்சுக்கே இடமில்லை. என்றார் அவர்.

கிட்டுவை நாடுகடத்தும்படி எவரும் எம்மைக் கேட்கவில்லை. அவருக்குத் தனிப்பட்ட பாதுகாப்பு வசதியும் செய்துகொடுக்கப்படவில்லை. மறைமுகமாக வாழ கிட்டுவுக்கு வழி செய்துகொடுத்தது மாத்திரமே சுவிஸ் அரசு அவருக்கு அளித்த ஒரேயொரு பாதுகாப்பு என்றார் அமைச்சர் பீற்றர் ஆர்பன்.

கிட்டுவின் விவகாரம் தனித்துவமானது என்றும் அவர் சொன்னார். கிட்டு சுவிஸ் நாட்டில் எங்கு தங்கியிருந்தார் என்பது மர்மமாகவே வைக்கப்பட்டிருந்தது அவரைப் பற்றிய விவகாரங்களை உள்ளூர் அதிகாரிகள்மட்டுமே கவனித்துவந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

### தமிழிசை விழா

தினமும் தமிழிசைக் கச்சேரிகள், நாதஸ்வரக் கச்சேரிகள், வயலின் கச்சேரிகள் என இரவு 11.00 மணிவரை விழா நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதற்கென அழகான கலையரங்கமும் அப்பகுதிமுழுவதும் அலங்காரங்களும், மின் விளக்குகளும்அமைக்கப்பட்டுள்ளன.

### புலிகளின்

களும் கலந்து கொண்டனர்.

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளின் விசேடபடைப்பிரிவு தமிழீழ காவற்துறை, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் ஆகியவற்றின் "பான்ட்" வாத்தியஇசை முழக்கத்துடன் இவர்களது அணி வகுப்புக்கள் இடம்பெற்றது

அதனைத்தொடர்ந்து விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் பிரமுகர்கள் சென்றனர். இவர்களைப் பின்தொடர்ந்து பாடசாலை மாணவர்கள். தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் அணி வகுத்து சென்றனர். குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த மக்கள் வெவ்வேறு வீதிகளின் ஊடாக எழுச்சிப் பேரணி ஆரம்பமாகுமிடத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

இவ்வாறு வரும் மக்கள்கூட்டம் காங்கேசன்துறை வீதியூடாக யாழ். பல்கலைக்கழகத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பேரணியுடன் இணைந்து கொண்டது. எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட மக்கள் எழுச்சியூட்டும் கோசங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கிய வண்ணம் உரத்த குரலில் கோசமிட்டவாறும் சென்றுகொண்டிருந்தனர். நூற்றுக் கணக்கான ஊர்திகள் பேரணியின் இடையே நகர்ந்து கொண்டிருந்தது. இராணுவ பொருளாதார அடக்கு முறைக்குள்ளாகியிருக்கும் மக்களின்அவல வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஊர்திகள் ஒருபுறம், அடக்குமுறைக்கெதிராக மக்கள் அணிதிரண்டு போராட்டம் நடாத்தும் வரலாற்று வளர்ச்சிப் போக்கைச் சித்தரிக்கும் ஊர்திகள் மறுபுறம், சொந்த மண்ணையும் மண்ணின்வளங்களையும நேசித்து தளராதஉறுதியுடன் போராடிவரும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் தொழில் துறைகளையும் சித்தரிக்கும் ஊர்திகள் இன்னொரு புறமாகவும். அந்நியரின் அடிவருடிகளாக சொந்த மண்ணை விட்டு ஓட்டம் எடுக்கும் கையாலாகாத்தனத்தை சித்தரிக்கும் ஊர்திகள் என பல்வேறு வகையான கருத்தோட்டங்களைச் சித்தரிக்கும் வகையிலான ஊர்திகள் நகர்ந்து சென்றன.

இவ்வெழுச்சிப்பேரணியாழ் பல்கலைக்கழக மைதானத்தை வந்தடைந்ததும் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாலை 6-00 மணியளவில் ஆரம்பமான பொதுக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம் பரிதி தலைமை தாங்கினார், ஆரம்பத்தில் கடற்புலிகளின் யாழ். பிரதேசப் பொறுப்பாளர் திரு. மறவன் அவர்கள் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து கூட்டுறவாளர் சார்பாக திரு. அன்ரனியும், கல்விப் பகுதியின் சார்பாக திரு. அருந்தவநாதனும், கடற்தொழிலாளர் சார்பில் திரு. தவரத்தினமும் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா யாழ். தளபதி திரு. செல்வராசா, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவுக் கொள்கை முன்னெடுப்புப் பிரிவு யாழ். மாவட்ட பொறுப்பாளர் திரு. பரா, விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா. மற்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பிரமுகர் திரு. பாலகுமார் ஆகியோர் உரைநிகழ்த்தினர். (க) (ச)

### மேதின

இவ்வாறு நேற்று நடைபெற்ற மேதினத்தையொட்டி யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்கலந்து கொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப்பிரமுகர் திரு. பாலகுமார்அவர்கள்கூறினார்.

இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இப் பொதுக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது இன்று எமது போராட்டத்தைக் கண்டு சிங்கள சமூகம் வியந்து நிற்கிறது. இப் போராட்டத்தினால் சிங்கள அரசின் இனவாதத் திரை கிழிக்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலமாக எமக்கெதிராக நடாத்தப்பட்டு வந்த அடக்குமுறைகள் இன்று சிங்கள மக்களுக்கெதிராக நகர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வாறு இடமாற்றப்பட்டுவரும் அடக்கு முறைகளால் சிங்கள மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டு வருகிறது. இதன் வெளிப்பாடே தென்பகுதியில் இருந்து வடக்குப் பகுதிக்கான தூதுக்குழுக்களின் விஜயங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

### ஒடுக்கப்பட்ட

இன்றைய கஷ்ட சூழ் நிலைகளிலும் எமது மக்கள் இங்கு திரண்டு வந்திருக்கின்ற இக் காட்சி எதிரிகளுக்கு, அரசிற்கு ஒன்றைஎடுத்துக் காட்டுகிறது. இந்த மக்கள் விடுதலைப் போராட்டத்தின் பின்னால் இந்த நானிலம் போற்றும் எமது தலைவனின் பின்னால் அணிதிரண்டு விட்டார்கள், மக்கள் கிளர்ந்தெழுந்து விட்டார்கள் இவர்கள் இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராட புறப்பட்டுவிட்டார்கள் என்கின்ற செய்தியை தெரிவிக்கிறது.

யாழ்ப்பாணத்தை பிடித்தும் மணலாற்றை துண்டாடி விடலாம் என்று கங்கணம் கட்டி நிற்கும் அரசிற்கு, இராணுவத்திற்கு இந்த மக்களின் எழுச்சி நிச்சயமாகப் பதிலடியாகவே இருக்கும் என தெரிவித்தார்.

### வீரம்

போராடிக்கொண்டிருக்கிறது என நேற்றைய மே தின பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

எங்களுடையஎல்லைகளிலே இந்த மண்ணுக்காக உயிர் நீத்த மவீரர்களுடைய நினைவுகள் எழுந்து நிற்கின்றன. அந்த நினைவுகளின் அடிப்படைகளிலே உறுதியுடனும் மிகவும் விவேகத்துடனும் நாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தக்கால கட்டத்தில் அனைத்து தமிழீழ மக்களும் இந்தப் போராட்டத்துடன் முற்று முழுதாக இணைந்து தங்களுடைய பங்களிப்புகளை முற்று முழுதாக வழங்கி இந்தப் போராட்டத்தினைபுனிதப்படுத்த வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தார்.

## மரண அறிவித்தல்

### திரு. வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து

பிறப்பு - 1909 - 08 - 30

இறப்பு - 1992 - 05 - 01

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வயித்தியாம்பிள்ளை சவரிமுத்து என்பவர் 01 - 05 - 1992 இல் காலமானார் இவர் காலஞ்சென்ற சவரிமுத்து மரியம்மாவின் அன்புக் கணவரும், எமிலியானுஸ், இராஜேஸ்வரி [மலர்], லூர்தம்மா [பூமணி], ஜெயசீலி கமலா, பற்றிமா வர்ணம் [ஜேர்மனி], சூசைப்பிள்ளை துரை [பிரான்ஸ்] இவர்களின் அன்புத் தந்தையும், மாவினி, காலஞ்சென்ற சிங்கராயர், அன்ரனி, மனோகரன், செல்வராஜா சூரி [ஜேர்மனி] இவர்களின் அன்பு மாமனாரும், ரொணி [பிரான்ஸ்], ஜெபேத் [ஜேர்மனி], ஜினா, கவிதா, நிஷாந்தன், மீரா, நிரோஸ் [ஜேர்மனி], தயன் [ஜேர்மனி], ரிவாணி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இன்று [02-05-92]மாலை மூன்று மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் கதிரை மாதா கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வழிபாட்டிற்கு பின் சேமக்காலையில் நல் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

நல்லாயன் வீதி, சில்லாலை

ச. எமிலியானுஸ் (எமில்)

[சி4355]

## தச்சன்காட்டு மோதலில் மாவீரரான வேங்கைகள்


கப்டன் செந்தில்


கப்டன் அறவாணன் (தவம்)

தச்சன்காட்டு காவலரண்மீது 30-04-1992 அன்று மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதலில் நான்கு வீரவேங்கைகள் வீரச்சாவை தழுவிக் கொண்டனர்.


கப்டன் நிலன் (சசி)


2-ம் லெப்டினனட் கார்வண்ணன் (ரமணன்)

## எழுத்துரிமைக்குதடைவரின் தி. மு. க. அதை மீறும்

பேச்சுரிமைக்கும், எழுத்துரிமைக்கும் தமிழக அரசு தடை விதித்தால் அதை மீறத் தி. மு. க. தயாராகவுள்ளது என்று அதன் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

ஆபாசமாகப் பேசவேண்டுமோ அல்லது எழுத வேண்டுமோ என்பது தி. மு. க. வின் நோக்கமல்ல தி. மு. க. ஆட்சியிலிருந்த போது சட்டப் பேரவை உறுப்பினர்களை விமர்சனம் செய்து பேசியவர்களை அது பொருட்படுத்தவில்லை என்றார்.

### முஸ். ஊர்காவற்

ணிக்கை 61 ஆக உயர்ந்துள்ளதாக தெரியவருகிறது.

மேலும், பயத்தின்காரணமாக காடுகளுக்கு ஓடிய தமிழர்கள் இன்னமும் கிராமங்களுக்கு திரும்பவில்லை எனவும் தெரியவருகிறது.

### பீரங்கி

படைப் பீரங்கிப் படகு ஒன்றிலிருந்து இப்பகுதிகளை நோக்கித்தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவில்லை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.